புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்களின் அவல நிலை

சே. இராஜேஸ்வரி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்- 635601

ஆய்வுச் சுருக்கம்:

நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமைமாய் விளங்குகின்றன. ஒப்பாரிப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களில் ஒருவகையாகும். இறந்தவர்களின் உறவினர் பொதுவாகப் பெண்கள் ஒப்புச் சொல்லி அழுவது ஒப்பாரி ஆகும். இப்பாடல்கள் பெண்களின் மனக் குமுறல்களையும், சோகத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும். பெண்கள் தந்தைக்காகவும், தாய்க்காகவும் கணவனுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் உடன் பிறந்தோருக்காகவும் மற்றும் உறவுகளுக்காகவும் பாடி அழும்போது அப்பாடல்களின் மூலம் இறந்தவரின் பெருமை, அவர்களை இழந்ததால் வரும் துன்பம், பெண்களின் கனவு பொய்த்துபோதல், சடங்குமுறைகள், நம்பிக்கைகள்ஆகியவை வெளிப்படுகின்றன. இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்பர். அதுபோல நாட்டுப்புற பாடல்கள் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக அமைத்துள்ளது.

கலைச்சொற்கள்: நிறைவேறாத ஆசைகள், கனவு பொய்ட்துப் போதல் , கணவனை இழத்தல், பெண்ணின் தாலி, பூவும் பொட்டும் இழத்தல், கோடி போடுதல், பறையொலி, பெண்களின் அவலநிலை.

## முன்னுரை:

நாட்டுப்புற ஒப்பாரிப்பாடல்கள் அனைத்தும்.பெண்களால் ஒரு பெண்ணின் கண்ணோட்டத்திலிருந்து பாடப்படுகின்றது. ஒரு குழந்தை பிறந்தபின் பெற்றோர் பாதுகாப்பிலும், இளமைப்படுவத்தில் கணவன் பாதுகாப்பிலும், முதுமைக் காலத்தில் தம் மக்களின் பாதுகாப்பிலும் வாழ்கின்றாள். பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழும் ஒரு சூழலே நம் சமூகத்தில் உள்ளது. பெண்ணானவள் பெற்றோர்க்கு மகளாகவும், உடன்பிறந்தவனுக்கு கூடப்பிறந்தவளாகவும், கணவனுக்கு மனைவியாகவும், தன் பிள்ளைகளுக்குத் தாயாகவும், பேரன் பேத்திகளுக்குப் பாட்டி என்ற நிலையில் இருந்தும் பாடுகின்றாள். ஒவ்வொரு நிலையிலிருந்தும் தன்னுடைய உறவுகளுடன் சேர்ந்துவாழ்ந்த பெண் அவர்களை இழக்கும்போது, சோகத்தில் புலம்பி அழுகிறாள். அப்போது
காட்டாற்று வெள்ளம் போல தங்கு தடையின்றி தானே ஓடிவரும் பெரும்பனல் புதுவெள்ளமாக உள்ளத்தில் குமுறி எழும் வேதனையின் வெளிப்பாடாக ஒப்பாரிப் பாடல்கள் அமைகிறது.இவ்வகைப்பாடல்கள் பெண்களின் அவலத்தை எவ்வாறு எடுத்துக் காட்டுகிறது என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

## நாட்டுப்புற ஒப்பாரிப் பாடங்கள் ஓர் அறிமுகம்:-

ஒப்பாரி என்பது ஒப்பு + ஆரி எனப் பிரிந்து "அழுகைப் பாட்டு" எனப் பொருள் தருகின்றது. அதாவது ஒப்பு சொல்லி ஆர்ப்பரித்து அழுவது என்பது ஒப்பாரியின் விளக்கமாகும். ஒருவருடைய நெருங்கிய உறவினர்கள் இறக்கும் போது, இழப்பின் துயரம் தாங்கிக் கொள்ள

முடியாமல் பெண்கள் இறந்தவர்களின் சிறப்புகளையும், அவர்களை இழந்ததால் தான் அடையப் போகும் துன்பத்தையும் பாடலாகப் பாடுவர். அதுவே ஒப்பாரியாகும்.

ஒப்பாரிப் பாடல்களின் வடிவங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மற்றும் தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா முதலான நாடுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒப்பாரி பாடல்கள் பாடப்படும் சூழல்கள்:

ஒப்பாரிப் பாடல்களை, பாடப்படும் சூழல் அடிப்படையில், இறந்தவுடன் பாடும் பாடல், இறுதிச் சடங்கில் பாடப்படும் பாடல், இறந்த எட்டாம் நாள், பதினாறாம் நாள், இருபத்திரண்டாம் நாள், ஆண்டுக்கு ஒருமுறை இறந்த நாள் வரும் போது, இறந்து பல ஆண்டுகள் ஆகியும், பலருடைய இறப்பில் பங்கேற்கும் போது பாடப்படும் பாடல் எனப் பலவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். மேலும், துன்பத்தின் வடிகாலாக இருக்கின்ற ஒப்பாரிப் பாடல்களின் இசை, விளம்பமும் மத்யமும் கலந்த ஒரு லய அமைப்பில், சோகத்தை உணர்த்தும் முகாரி, ஆகிரி முதலான இராகச் சாயலுடன் விளங்குகின்றது. ஒப்பாரி பாடல்கள் உணர்வு மயமான சூழலில் பாடப்பட்டாலும், அதிலும் வடிவ ஒழுங்கு, அணியமைப்பு, எதுகை, மோனை, இயைபு, முரண், கற்பனை நயம் எனப் பல அழகுகள் உள்ளன. ஒப்பாரிப் பாடல்களின் மூலமாகவே பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ள நடைமுறை சடங்குகளைப் பெரிதும் அறிய முடிகின்றது. முக்கியமாக, பெண் சமுதாயத்தின் நிலையினை ஒப்பாரிப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. கணவர் உள்ளவரை பூவும், பொட்டும் வைத்திருந்த நிலை மாறுவதையும், கணவர் இறந்த பின்னர் தன்னைத் தீய சகுணமாக மக்கள் கருதுவதையும், மங்கல நிகழ்வுகளில் பங்கேற்பதைச் சமூகம் விரும்பாததையும் பல ஒப்பாரிப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. எனவே , ஒரு சமூக மரபின் கண்ணாடியாக ஒப்பாரி இருக்கின்றது.

இலக்கியங்களில் ஒப்பாரிப் பாடல்கள்:

இன்று, தமிழகத்தின் பல்வேறு தொல்லியல் களங்களில் கிடைக்கப் பெறும் முதுமக்கள் தாழிகள் ஆதி காலத்தில் இருந்தே இறப்பிற்கான பல்வேறு நம்பிக்கைகளும் சடங்குகளும் தமிழர்களிடம் இருந்து வந்துள்ளதை உறுதி செய்கின்றன. இறந்தவர் பயன்படுத்திய பொருட்களோடு அவரைப் புதைக்கும் வழக்கம் என்பது ஒருவகையில் ஒப்பாரி பாடும் வழக்கத்தினையும் உறுதி செய்கின்றது. எவ்வாறெனில், இறப்பிற்கான சடங்குகள் குறைந்து காணப்படும் தற்காலத்திலேயே ஒப்பாரிகள் பாடப்படும் போது, பெரும் சடங்குகள் இருந்துள்ள தாழிகள் காலத்தில் ஒப்பாரி மிகவும் செழித்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருதுகோள். அதனை உறுதிசெய்யும் விதத்தில், 'கையறுநிலைப்பாடல், 'புலம்பல்', 'இரங்கற்பா''சாவுப்பாட்டு', 'இழவுப்பாட்டு', 'அழுகைப்பாட்டு' என பல்வேறு பெயர்களில் இலக்கியத்தில் ஒப்பாரி பதிவு செய்யப்பட்டுள்ளது.

''இளிவே இழவே அசைவே வறுமை யென
விளியில் கொள்கை அழுகை நான்கே '' - தொல்காப்பியம் மெய்ப்பாட்டில்

என்று அழுகைப்பாட்டிற்கு தொல்காப்பியம் இலக்கணம் கூறுகிறது.

''வெற்றி வேந்தன் விண்ணகம் அடைந்தபின்
கற்றோர் உரைப்பது கையறு நிலையே '' – பன்னிருபாட்டியல்

எனப் பன்னிரு பாட்டில் கையறு நிலைக்கு விளக்கம் தருகிறது. வாய்மொழியாக இருந்து வந்த ஒப்பாரியின் பழமையான இலக்கியச் சான்றுகளாக, பாரி இறந்ததும் அவன் மகள்

''அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின் ..... என்தை யுமிலமே '' – புறநானூறு 112

எனப் பாடும் புறநானுற்றுப் பாடலும், அதியமான் இறந்த பிறகு பாடப்பட்ட

''சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகள் பெறினே யாம்பாடத் தான் மகில்துண்ணும்'' - புறநானூறு 235

என்ற பாடல் வரிகளும் திகழ்கின்றன. மேலும்,
கம்பராமாயணத்தில், இராவணன் தனது மகனின் இறப்பில்,

''மகனே ! எனக்கு நீ செய்யத் தக்க இறுதிக் கடன்களை எல்லாம் நான் உனக்கு
செய்யும் நிலைமையை அடைந்தேன். என்னை விட இழிந்தவர்கள் யாருமில்லை''

என்று புலம்புவதாக அமைந்த

*'சினத்தொடும் கொற்றம் முற்ற,*
*இந்திரன் செல்வம் மேவ,*
*நினைத்தது முடித்து நின்றேன்;*
*நேரிழை ஒருத்தி நீரால்,*
*எனக்கு நீசெய்யத்தக்க கடன் எலாம்,*
*ஏங்கி ஏங்கி, உனக்கு*
*நான் செய்வதானேன்! என்னின்*
*யார் உலகத்து உள்ளார்?'*

*என்ற பாடலும், வரீகவிராயர் இயற்றிய ''அரிச்சந்திர புராணம்'' என்னும் நூலில் உள்ள ''சந்திரமதி புலம்பல்'' என்ற பகுதியும் ஒப்பாரி பாடலின் மேம்பட்ட இலக்கிய வடிவங்களாகப் போற்றப்படுகின்றன.*

*மேலும், ஒப்பாரியின் போது பறை மற்றும் உறுமி ஆகிய இசைக் கருவிகளைத் தமிழர்கள் இசைத்து வந்துள்ளது ஒப்பாரி பாடல்களில் வரும் வரிகள் மூலமாக அறிய முடிகின்றது. உதாரணமாக ''பறையொலிக்க போனதென்ன''என்றும் ''உறுமிச் சத்தம் கேட்கும் நாள் வருமோ''என்றும் பாடப்படும் வரிகள் இறப்பிற்கென்றே தனி இசையும், இசைக்கருவிகளும் இருந்ததை உறுதி செய்கின்றன. இன்றைய நாட்களிலும் இறுதி ஊர்வலத்தில் பறை (தப்பு) இசைக்கப்படுவது ஒப்பாரியின் மரபுவழித் தொடர்ச்சியை உணர்த்துகின்றது. மேலும், ஒப்பாரி என்பது ஒரு தொழில்முறையாகவும் பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. அதாவது, நெஞ்சில் அடித்துப் பாடும் வழக்கமான ஒப்பாரியைப் பாடுவதற்கென்றே கூலி கொடுத்து ஆட்கள் வரவழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. அதை வைத்தே ''கூலிக்கு மாரடிக்கும் கூட்டம்'' என்ற சொற்றொடர் உருவாகியுள்ளது.*

*கணவனை இழந்த பெண்களின் அவல நிலை :-*

*திருமணம் முடிந்த பிறகு பெண்கள் கணவனுக்காகவும், தன் பிள்ளைகளுக்காகவும், கணவனின் குடும்பத்திற்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு குடும்பத்தைக் கட்டிக் காக்கும் குலவிளக்காக வாழும் அதே பெண் கணவனை இழக்கும் போது விதவை (அமங்கலி) ஆகிறாள். கைம்மை நோன்பு மிகவும் துன்பமானது. இந்த வேதனையை எவ்வாறு தாங்கப் போகிறேன் என்று புலம்பி அழுகிறாள். சில பெண்கள் திருமணம் முடிந்து பல வருடங்களாக பிள்ளைப்பேறு இல்லாமலும் கணவனையே நம்பி வாழ்கின்றனர். திருமணம் முடிந்து கனவுகளில் மிதக்க வேண்டிய சில பெண்கள் விதவைக் கோலம் பூண்கின்றனர். பெற்றோர்க்குப் பிறகு பிறந்த வீட்டிலும் வரவேற்பு இல்லை. சொத்துரிமைஇல்லை. இவ்வாறு வாழ்நாளில் பல்வேறு நிலைகளில் பெண்களின் துயரம் ஈடு இணையில்லாத, ஆற்றமுடியாத, நிறைவேறாத ஆசைகளின் வெளிப்பாடும், இந்த சமூகத்தின் நிராகப்புகளை எடுத்துக் காட்டுவதாய் ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றன.*

*தான் வாழ்வாள் முழுவதும் பிறரிடம் சொல்லி அழமுடியாத துக்கங்களை ஒப்பாரிப் பாடல் மூலமேபெண்கள் வெளிப்படுத்துகிறார்கள்.*

*கணவனை இழந்ததால் வந்த துன்பம்:*

*முத்துப்பட்டன் கதைப்பாடலில் இரு பெண்கள் அக்கா தங்கை இருவரும் ஒரே நேரத்தில் முத்துப்பட்டனை மணக்கின்றனர். திருமணம் முடிந்ததும் அன்று இரவே மாடுபிடி சண்டையில் முத்துப்பட்டன் இறந்துவிடுகின்றான். இந்த துன்பத்தை தாங்க முடியாமல் பெண்கள் பாடுகின்றனர்.*

*இறந்து கிடந்த கணவனைக் கண்டதும் பெண்கள் அடிந்து விழுந்து புழுதியில் புரண்டி வயிற்றில் ஈரல் கலங்கிடவே அடித்துக் கொண்டு, வாரியெடுத்து மார்போடு அணைத்து, அழுகின்றனர்.*

*''பொட்டும் அழியலயே போட்டகுறி மங்கலயே*
*சற்றே கருங்கலையே சாமிமுகம் வாடலையே.''*

*என்று முகத்தோடு முகம்வைத்து முத்தமிட்டுக் கொண்டழுதனர்,*

*''நாலு கழியயலயே நாலாநீர் கூடலையே*
*ஏழுகழியலயே ஏழாநீர் கூடலையே*
*தாலி கொண்டு வந்த தட்டானும் போகலையே*

மாலை கொண்டுவந்த பண்டாரமும் போகலையே
கொட்டிப் பறையனுக்கு கொத்துக் கொடுக்கலையே “

என்று புலம்புகின்றனர். மேலும், கண்திருஷ்டி வந்துவிட்டதோ, தோசம் வந்துவிட்டதோ என்று எண்ணுகிறாள்.

”கோண மணவறையில் குந்தவைத்த தோசமுண்டு
வட்ட மணவறையில் வந்திருந்த தோசமுண்டு
என் கணவா என் கணவா இந்த விதி வருவானேன்?
பொருந்தி இருந்தோமா பிள்ளைகளைப் பெற்றோமா?
பணியாரம் சுட்ட சட்டி பாதி மனம் போகலையே
பந்தல் பிரிக்கலையே வந்த சணம் போகளையே?”

எண் மனவரையில் அமர்நத நேரம் சரியில்லையோ என்று வருந்துகிறாள். மேலும் திருமண கோலம் முடியும் முன்னே நான் விதவைக் கோலம் பூண்டேனா ? என்பதனை

“மஞ்சள் புடவையதை மடித்துருத்தும் வேளையிலே
கஞ்சிப் புடவையதை கழுத்திலிட நாளாச்சே”

என்று அழுகிறாள்.

இதன் மூலம் விதவைப் பெண்கள் நல்ல உடை அணியக்கூடாது என்ற அவலம் இருந்ததை அறிய முடிகிறது.

”பார்த்தாளோ பார்த்தாளோ பாம்புக் கண்ணி பார்த்தாளோ
குண்டுக்கண்ணி சக்களத்தி குறிப்பாகப் பார்த்தாளோ
ஆணழகானென்று எந்த அடியறுவாள் பார்த்தாளோ”

என்று கண்ணேறு வந்ததால் தான் இறந்து விட்டாரோ என்று எண்ணி புலம்புகின்றாள்.

தாலியை இழந்த பெண்ணின் துயரம்:

கணவனை இழந்த பெண்கள் தாலி, மெட்டி, அணியக்கூடாது பூவும் பொட்டும் வைக்கக்கூடாது என்ற நிலை இச்சமுதாயத்தில் உள்ளது. கணவனை இழந்த பெண்ணொருத்தி தாலியை கழற்ற மனம் ஒப்பாது ,இந்த ஒப்பாரியைப் பாடுகின்றாள்.

”ஆத்தங்கரை மண்ணெடுத்து எனக்கு
அரும்புவச்சி தாலிபண்ணி
நான் அவசரமா அறுப்பேனே எனக்கு ஒரு
ஆசாரியும் சொல்லலியே”

இப்பாடல் மூலம் திருமணமான உடனே கணவனை இழந்ததால் தாலியை கழற்ற வேண்டிய அவல நிலையை அறிய முடிகிறது.

கனவு பொய்த்துப் போதல்:

திருமணத்திற்குப் பிறகு கணவில் மிதக்க வேண்டிய மனைவி கண்ணீரில் மிதகிறால். திரும்பி வராத கணவனை நம்பி நந்மாற்றம் அடைகிறாள்.

இன்னொரு பெண் தான் பூவை இழக்க நேரிடும் என்பதனை,

”என் கணவர் வருவாருனு
நான் கனகாமரம் வாங்கிவச்சேன்
என் கணவர் வரவில்லைனு
கனகாம்பரம் வாடிடுச்சே
என் மன்னவர் வருவாருன்னு நான்
மல்லிகைப்பூ வாங்கி வச்சேன்
என் மன்னவர் வரலைன்னு
மல்லிகைப்பூ வாடிடுச்சி.
என் ராஜா வருவாருன்னு நான்
ரோசாப்பூ வாங்கி வச்சேன்
என் ராஜா வரலைன்னு
ரோசாப்பூ வாடிடுச்சே “

என்று அழுகிறாள். இதன் மூலம் கனவு பொய்த்துப் போனதால் பெண்கள் ஏமாற்றமும் துன்பமும் அடைகின்றனர் என்பதை அறியலாம்.
கணவன் சொல்லாமல் போய்விட்டதாக எண்ணி அழும் பெண்,

''பூசும் திருநீறு பூசசெய்யும் பன்னீரு
அள்ளாம என் கணவா
சொல்லாம புறப்பட்டியே''

என்று பாடுகின்றாள்.
கணவன் இறந்தவுடன் தாலியைக் கழற்றிவிடுவார்கள் . இப்படி செய்ய இந்த ஊர் மக்களுக்கு சம்மதமோ என்று ஒரு பெண் பாடுகின்றாள்.

''பச்ச மஞ்சா பவள மஞ்சா பத்தினிகள் பூசுமஞ்சா
இந்த பத்தினிக்குத் தாலிவாங்க இந்த ஊருக்குச் சம்மதமோ
உருண்ட மஞ்சா உறைக்கும் மஞ்சா
இந்த உத்தமிக்குத் தாலி வாங்க
இந்த ஊர் சனத்துக்குச் சம்மதமோ''

தாய் தந்தையரை இழந்ததால் வந்த துன்பம்:

தாய் தந்தை இறந்த பிறகு விதவைக் கோலம் பூண்ட பெண்ணுக்கு தாய்வீடும் சொந்தமில்லை, அரவணைப்பார் யாருமில்லை. இந்த வேதனையை இப்பாடல் உணர்த்தும்.

''மணலிலே கோயில் கட்டி
நான் மணிக்கோயிலைச் சுத்திவந்தேன் – எனக்கு
மாலை பொருத்தமில்லை
இந்த மதாவீடு சொந்தமில்லை
தரையிலே கோயில் கட்டி நான் தனிக் கோயிலை சுத்தி வந்தேன்
எனக்கு தாலிப் பொருத்தமில்லை தாய் வீடும் சொந்தமில்லை''

என்று அழுகிறாள். பெற்ற தாயை இழந்த பெண்ணொருத்தி தன் நெஞ்சுலுள்ள சோக நெருப்பு எப்போது குறையும் என்று அழுகிறாள்.

''தச்சன் ஒலை நெருப்பு தணியும் ஒரு சாமம்
என் தங்கமடி நெருப்பு தான் தணிவது எக்காலம்''

என்று அழுகிறாள். இப்பாடல் மூலம் தாயில்லாமல் பெண்கள் படும் துயரம் வெளிப்படுகிறது.

அன்பிற்காக ஏங்கும் பெண்களின் துன்பம்:

ஒரு பெண்ணின் கணவன் இறந்தபின் தாய் வீட்டு கோடி போடவேண்டும். இது உடன் பிறந்தவன் செய்யும் ஒரு சடங்கு. நாங்கள் இருக்கிறோம் இனி உன்னை ஆதரிக்க என்பதை உணர்த்த இது செய்யப்படுகிறது.
அந்த கோடி போடுவதற்கும் கூட அண்னன் மார்கள் அஞ்சுகிறார்கள் என்பதனை,

'' வாசலிலே வாழை மரம் வகை வகையாய் காய்க்கும் மரம்
வகை கெட்ட அண்னன்மாரே எனக்கு வரிசையிட அஞ்சுராங்கோ?
கொளத்திலே கொய்யா மரம் கொலை கொலையாய் காய்க்கும் மரம்
இந்த குணம் கெட்ட அண்ணன் மாரே கோடியிட அஞ்சுராங்கோ''

என்று அழுகிறாள். இதன் மூலம் பெண்கள் வேண்டுவது அன்பும் அரவணைப்பும் மட்டுமே என்பதை அறியலாம்.
தாய் தந்தை இறந்த பிறகு தாய்வீட்டில் பெண்களுக்கு வரவேற்பில்லை; அன்புகாட்டவோ அரவணைக்கவோ ஆளில்லை, தன் உடன் பிறந்த அண்ணன் மார்களிடம் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் பெண்களின் நிலையை ஒரு பெண்,

''மேட்டுத் தெருவாரே மோரு விக்கும். அண்ணமாரே
உங்க மோருக்கு நான் வரல...
பள்ளத் தெருவாரே பாலுவிக்கும் அண்ணன்மாரே
உங்க பாலுக்கு நான் வரல
உங்க பாசத்துக்கு நான் அழறேன்''

என்று ஏங்குகிறாள்.

தந்தையை இழந்த பெண்ணொருத்தி தன்னை அரவணைக்க யாருமில்லை என்று ஏங்கி அழும் பாடல் இது.

''மட்ட மட்ட மாமரமாம் மயிலடங்கும் சத்திரமாம்
இந்த மட்டமரம் பட்டுருச்சே இந்த மயில் போயி எங்கடங்கும்
குட்ட குட்ட புளியமரம் இந்த குயிலடங்கும் நந்தவனம்
இந்த குட்டமரம் பட்டுருச்சே இந்த குயில் போயி எங்கடங்கும்

என்று அழுகிறாள்.

முடிவுரை:

''வாழ்வின் மூன்னுரை தாலாட்டு ஆனால் முடிவுரை ஒப்பாரியாகும்''. ''தாலாட்டு கலங்கரை விளக்கமானால் ஒப்பாரி நினைவுச் சின்னமாகும்''. தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பு என்பார் டாக்டர் சு .சக்திவேல். இக்கட்டுரையின் மூலம் பெண் சமுதாயத்தின் நிலையினை ஒப்பாடல்கள் படம் பித்துத் காட்டுவதை அறிய முடிகிறது. கணவன் இருக்கும்.வரை பூவும் பொட்டும் வைத்துத் கொண்டு பெண்கள் மங்கலமாகத் திகழ்கின்றனர். மேலும் அந்த நிலை கணவன் இழந்த பின் அமங்கலியாகவும் தீய சக்தியாகவும் மக்கள் கருதுவதால் மங்கல நிகழ்வுகளில் பங்கேற்பதை இச்சமூகம் விரும்பாததையும் ஒப்பாரிப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. தமிழர்களின் வாழ்வோடு பிண்ணிப் பிணைந்த ஒப்பாரிப் பாடல்கள் பெண்களின் அவல நிலைகளை பல்வேறு சூழல்களில் உலவியல் ரீதியாக எடுத்துக் காட்டுவதோடு, பெண்கள் உளவியல் சார்ந்து இச்சமூகத்தில் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் பதிவு செய்கிறது. தன் வாழ்வில் வரும் சொல்ல முடியாத, தாளாத துன்பத்தை தன் கண்ணீர் மூலமே வெளிப்படுத்துகிறார்கள். இவ்வகைப் பாடல்கள் சமூக நடப்பியலை தாங்கியுள்ளதால் இதை பதிவு செய்வதும் பாதுகாப்பதும் காலத்தின் தேவையாகும். அழிந்து வரும் தமிழ் நாட்டுப்புற படல்களை சேகரித்து அதனை வகைப்படுத்தி மீட்டுருவாக்கம் செய்து பாதுகாப்பது நம் அனைவரின் கடமையாகும்.

துணைநூற்பட்டியல்

1. திருஞானசம்பந்தம் . பா தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் கதிர் பதிப்பகம் திருவையாறு.
2. சுப்பிரமணியன். சா. வே. புறநானூறு மூலமும் உரையும் மெய்யப்பன் பதிப்பகம்
3. பன்னிரு பாட்டியல் இணையதளம் www.tamildigitallibrary.in
4. டாக்டர் சு. சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு மணிவாசகர் பதிப்பு
5. முத்துப்பட்டன் கதை நா. வானமாமலை மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
6. தமிழர் நாட்டுப்பாடல் நா. வானமாமலை நியூ சென்சுரி புக் ஹவுஸ்

தகவளாலர்கள்:

1. கிருஷ்ணவேணி (45) – பெத்தூர் ஆலங்காயம் -திருப்பத்தூர் மாவட்டம் – சேகரிக்கப்பட்ட நாள் 05-04-2023
2. அகரத்தம்மாள் (63) - பெத்தூர் ஆலங்காயம் - திருப்பத்தூர் மாவட்டம் – சேகரிக்கப்பட்ட நாள் 15-04-2023.
3. இரத்தினம்மாள் (54) - ஆலங்காயம்- திருப்பத்தூர் மாவட்டம் – சேகரிக்கப்பட்ட நாள் 13-05-2023.
4. ஆனந்தவள்ளி (48) - ஆலங்காயம் - திருப்பத்தூர் மாவட்டம் – சேகரிக்கப்பட்ட நாள் 05-04-2023

********* ********* ********** ********* ********* ********** ********** **********